# உணவு பாதுகாப்பு மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றின் சூழமைவிற்குள், நீடித்துநிலைக்கக்கூடிய சிறிய அளவிலான மீன் வளங்களை பாதுகாப்பதற்கான சிறு மீனவ தன்னார்வ வழிகாட்டல்கள்.

## 1. நோக்கம்.

சிறுமீனவ கைத்தொழிலின் நீடித்துநிலைக்கக்கூடிய தன்மையை உறுதிபடுத்துவதற்கான, சிறுமீனவ தன்னார்வ வழிகாட்டலில் உள்ள நோக்கங்கள்.

- உலகளாவிய உணவு பாதுகாப்பை அதிகரித்தல்.
- உலகின் சமூக மற்றும் பொருளாதாரத்தின் எதிர்கால முன்னேற்றத்திற்காக சிறுமீனவ கைத்தொழிலின் பங்களிப்பை ஊக்கப்படுத்துதல்.
- மீனவ தொழிலாளர்களின் சமூக , பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கான பங்களிப்பு.
- மீன்பிடி வளங்களின் நிலையான பயன்பாட்டை அடைதல்.

## 2. வழிகாட்டல் கோட்பாடுகள்

### பொறுப்புடன்கூடிய உடைமையுரிமைக்கான ஆளுகை

குறித்த வளங்களின் உடைமையை பொறுப்புடன் ஆளுகை செய்வது என்பது, சிறுமீனவ தொழிலாளர்களின் மனித உரிமைகள் மற்றும் சமூக, பொருளாதார, கலாசார உரிமைகளை அடைவதற்கான மைய காரணியாகும். சிறுமீனவ சமூகத்திற்கு பாதுகாப்பு மற்றும் சமத்துவத்துடன் கூடிய , சமூக, கலாசாரத்திற்கு உகந்தவாறு மீனவ வளங்களின் உடைமையுரிமையானது, மீனவ பிரதேசங்கள் மற்றும் அதனையண்டிய பிரதேசங்களிலும், வனாந்தர பிரதேசங்களிலும் காணப்பட வேண்டும்.

இங்கு பெண்களின் உடைமையுரிமை தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். அத்துடன் அனைத்து முறைகளிலுமான சட்ட உடைமையுரிமை தொடர்பாக கண்டறியப்பட்டு அவை அறிக்கைப்படுத்தப்பட்டு பின்பற்றப்பட வேண்டும்.

தேவைப்படும் சந்தர்ப்பத்தின் பொழுது, இவற்றுள் விசேடமாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டியது, பாரம்பரிய மற்றும் விசேட ஆபத்தான நிலைமையைக்கொண்ட நீர் வளங்களின் உரிமையும், காணி மற்றும் பூர்விக குடிகளைப் போலவே சிறுபாண்மை மக்களின் உரிமை தொடர்பாகவுமாகும்.

சட்டரீதியான மறுசீரமைப்புக்கள், பெண்களின் உரிமைகளுக்கு மாறாக செயற்படுமிடத்து, பெண்கள் பாரம்பரிய உடைமையுரிமையை உகந்த முறையில் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும்.

நீர் மற்றும் கரையோர சூழல் தொகுதிகள் மீள்கட்டியெழுப்புவதற்கு, பாதுகாப்பதற்கு மற்றும் இணை முகாமைத்துவத்துவ செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு சிறுமீனவர்கள் மற்றும் பூர்விக குடிகளுக்குள்ள செயற்பணிகளை இனங்காண வேண்டும்.

விசேடமாக சிறுமீனவ சமூகம், கூட்டுப்பயன்பாடு மற்றும் இணைமுகாமைத்துவ செயற்பாடுகளில் ஈடுபடும் பொழுதும், சமூக, பொருளாதார, சூழல் தொடர்பான நோக்கங்களை கவனத்திற் கொண்டு அரச உரிமையுடன் கூடிய அல்லது ஆளுகை செய்கின்ற காணிகள் அல்லது நீர் வளங்கள் தொடர்பான உடைமையுரிமையை நிலை நாட்ட வேண்டும்.

சிறுமீனவர்களுக்கு, தேசிய நீர் நிரலில் மீனவ செயற்பாட்டில் ஈடுபட சிறப்பான பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். மூன்றாம் தரப்பினருக்கு வளங்களுக்கு பிரவேசிப்பதற்கான உரிமைமையை வழங்குகின்ற உடன்படிக்கைகளுக்கு நுழைவதற்கு முன் சிறுமீனவ சமூகங்களின் இப்பிரதேசத்திற்குள்ள கோரிக்கைகள் தொடர்பாக முறையான கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மீனவ பிரதேசங்களில், வேறு வளங்களை பாவிக்கும் நபர்களும் காணப்படுவதால் சிறுமீனவ பிரதேசங்களில் போட்டித்தன்மை அதிகரிக்கின்றன. இதன் காரணமாக இப்பிரதேசங்களில் முரண்பாடுகள் அதிகமாக ஏற்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பொழுது சிறுமீனவ சமூகத்திற்கு விசேட ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அவர்களை சட்டமுறையற்ற ரீதியில் வெளியேற்றுவதோ அல்லது சட்ட ரீதியான உடைமையுரிமை தொடர்பாக கவனம் செலுத்தாது செயற்படுவதோ அல்லது அழிப்பதோ செய்யக்கூடாது.

பாரிய அளவிலான அபிவிருத்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொழுது அரசுகள் மற்றும் ஏனைய தரப்பினர் சிறுமீனவ சமூகங்களுடன் அர்த்தமுள்ள ஆலோசனைகளை நிகழ்த்த வேண்டும். அத்துடன் அக் கருத்திட்டங்களால் ஏற்படும் தாக்க முறைகள் தொடர்பாகவும் தாக்க ஆய்வுகள் நிகழ்த்தப்பட வேண்டும்.

மேலும் சிறுமீனவ சமூகங்களின் உடைமையுரிமை தொடர்பாக ஏற்படும் சிக்கலான நிலைமைகளின் பொழுது, அக் காலத்திற்கு ஏற்ப கட்டுப்படியாகக்கூடிய விலையைப் போலவே செயற்திறனான முறையில் தீர்வுகளை வழங்கி இழப்பீடுகளை செலுத்துதல் அல்லது உரிமையாளர்களுக்கு மீளப் பெற்றுக்கொடுத்தல், உடனடியாக செய்யப்பட வேண்டும்.

இயற்கை அனர்த்தங்களால் அல்லது யுத்த சூழ்நிலைமை காரணமாக நிகழும் இடப்பெயர்வுகள் காரணமாக சிறுமீனவர்களுக்கு ஏற்படுகின்ற விளைவுகள் அதிகரிக்கின்றது. மீனவ வளங்களின் நீடித்து நிலைக்கக்கூடிய தன்மையை கவனத்திற் கொண்டு மரபுரீதியான மீனவ பிரதேசங்கள் மற்றும் கரையோர பிரதேசங்களுக்கு பிரவேசிப்பதற்கான உரிமைகளை மீள வழங்குவதற்கு அரசுகள்

அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் கடுமையாக மனித உரிமைகள் மீறப்பட்ட மக்களுக்கு தமது வாழ்க்கை முறையை மீள கட்டியமைப்பதற்காக ஒத்துழைப்பு வழங்குவதற்காக பொறிமுறையை தயாரித்தலும் பெண்களுக்கு எதிராக நிகழும் அனைத்து ரீதியான உடைமையுரிமை அநீதிகளும் அகற்றப்பட வேண்டும்.

## அ. நீடித்து நிலைக்கக்கூடிய வளங்களின் முகாமைத்துவம்.

சிறிய அளவிலான மீன்பிடி கைத்தொழிலின் நீண்டகால பாதுகாப்புக்காகவும், மீனவ வளங்களின் நீடித்து நிலைக்கக்கூடிய பாவணைக்காகவும், உகந்த நடவடிக்கை மற்றும் சந்தர்ப்பங்களை பெற்றுக்கொள்வதற்காக உகந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மேலும் உரிமை மற்றும் பொறுப்பு ஆகிய இரண்டும் ஒன்றாக பயணிக்கின்றது. நீங்கள் யாதேனும் ஒரு வளத்தை அனுபவிப்பவராயின், அவ் வளத்தை பாதுகாத்தல் மற்றும் நீடித்து நிலைக்கக்கூடியவாறு பாவித்தலின் பொறுப்பு உங்களைச் சார்ந்ததாகும்.

சிறுமீனவ கைத்தொழிலில் பயன்படுத்தப்படுகின்ற மீனவ செயற்பாடுகளின் காரணமாக சூழலுக்கு மற்றும் அதனையண்டிய முக்கியமான மீனினங்களுக்கு ஏற்படுத்தப்படுகின்ற பாதிப்பானது குறைகக்கப்பட வேண்டும்.

வள முகாமைத்துவ செயற்பாட்டின் பொழுது சிறுமீனவர்கள் பொறுப்புக்களை எடுக்கும் முகமாக அரசுகள் அவர்களுக்கான ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

சிறுமீனவ தொழிலாளர்கள் மூலம் முகாமைத்துவ திட்டமிடல் அல்லது தயாரிக்கப்படும் சந்தர்ப்பங்களின் பொழுது மீனவ சமூகங்களை இணைத்துக்கொள்ள வேண்டும். அத்துடன் பெண்கள் உள்ளிட்ட அச்சுறுத்தலுக்கு உள்ளகாக்கப்படும் குழுக்களையும் உள்ளடக்கக்கூடியவாறு சமமான பங்குபற்றுதலை உறுதிசெய்ய வேண்டும்.

தற்பொழுது உள்ள அரச சட்டத்திற்குள் பங்குபற்றுதல் மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளை முன்னேற்ற வேண்டும். சிறுமீனவர்களுக்கு பொறுத்தமான முறையில் காண்பாணிப்பு மற்றும் நிர்வாக செயற்பாடுகளை அரசுகள் நிறுவி அவற்றை ஊக்கப்படுத்த வேண்டும்.

சிறுமீனவர்கள், முகாமைத்துவ செயற்பாட்டிற்கு தேவையான தகவல்களை வழங்கி கண்காணிப்பு செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மேலும் அரசுகள், அனைத்து முறைகளிலான சட்டமுறையற்ற மற்றும் அழிவுகரமான மீனவ செயற்பாடுகளை இல்லாதொழித்தல் மற்றும் குறைத்தல் என்பவற்றை இலக்காகக் கொண்டு செயற்பட வேண்டும்.

அரசுகள் இணை முகாமைத்துவ செயற்பாடுகளின் பொழுது அனைத்து தரப்பினருக்கும் உள்ள பொறுப்பு மற்றும் பணி தொடர்பாக முக்கியமான சட்ட ஒத்துழைப்பு செயற்பாடுகளை நிறுவி அவற்றை தெளிவுபடுத்த வேண்டும்.

சிறுமீனவ தொழிலாளர்கள் அனைத்து வகையான பிரதேச மற்றும் தேசிய ரீதியான தொழிற் சங்கம் மற்றும் மீனவ செயற்பாடுகளுக்கு அமைவான முடிவுகளை எடுக்கும் மற்றும் கொள்கைகளை தயாரிக்கும் செயற்பாட்டிற்கு பங்களிப்பாற்ற வேண்டும்.

இணை முகாமைத்துவ செயற்பாட்டை ஊக்கப்படுத்தி அரசுகள் மற்றும் சிறுமீனவ துறை ஆகிய இரண்டும் அறுவடை செயற்பாட்டிற்கு அப்பால் முழுமையான அல்லது அறுவடைக்கு பின்னரான செயற்பாட்டின் பொழுது ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் அவர்களின் அறிவுக்கு, தூர நோக்குக்கு, தேவைகளுக்கு ஏற்றவாறு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். விசேடமாக நீர் மற்றும் அதனையண்டிய வளங்களை அண்டைய நாடுகளுடன் பகிர்ந்து கொள்கின்ற சந்தர்ப்பங்களின் பொழுது சிறுமீனவ மக்களின் உடைமையுரிமை பாதுகாக்கப்படுவதாக உறுதி செய்ய வேண்டும்.

சிறுமீனவ மக்களுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் முகமாக மிக அதிகமான மீன்களை பிடிப்பதற்காக அதிகப்படியான நிதிகளை வழங்குதல் அல்லது கொள்கைகளை உறுவாக்குவதை தடுக்க வேண்டும்.

## 3. சமூக அபிவிருத்தி, தொழில் வாய்ப்புக்கள் மற்றும் உகந்த பணிகள்.

சிறுமீனவ வள முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தியின் பொழுது அனைத்து தரப்பினர்களினாலும் முழுமையான செயற்பாட்டை பின்பற்ற வேண்டும்.

அரசுகள் மூலம் சுகாதார கல்வி எழுத்தறிவு, டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் ஏனைய தொழில்நுட்ப ஆற்றல்களை ஊக்குவிப்பதற்காக முதலீடுகள் செய்யப்பட வேண்டும்.

ஒட்டுமொத்த பெறுமான சங்கிலி உள்ளடக்கப்படுமாறு சிறுமீனவ செயற்பாட்டில் உள்ள அனைத்து விதமான சந்தர்ப்பங்களுக்கும் அமைவாக சமூக பாதுகாப்பு வாய்ப்புகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இச் செயற்பாட்டின்பொழுது பெண்களை உள்ளடக்குவதற்கு விசேடமாக சேமிப்பு கடன் மற்றும் காப்புறுதி செயற்பாட்டை தயாரிப்பாற்காக அரசாங்கங்களால் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

சிறுமீனவ பெறுமான சங்கிலியில் உள்ள பரவலான செயற்பாடுகள் பொருளாதார மற்றும் தொழில் ரீதியான செயற்பாடுகளாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

அரசுகளால், சிறுமீனவ கைத்தொழிலுக்கு மற்றும் மீனவ தொழிலாளர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட தரத்திலான வாழ்க்கை தரநிலைக்குள்ள உரிமையை உறுதி செய்வதற்காக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அரசுகளால் அனைத்தும் உள்ளடக்கியதாக அநீதி ஏற்படாது உகந்த பொருளாதார கொள்கைகளை உறுவாக்குவதன் மூலம் சிறுமீனவர்களுக்கு, ஊழியத்திற்கு, முதலீட்டுக்கு மற்றும் முகாமைத்துவத்திற்கு நீதியான முறையில் வருமானத்தை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அரசாங்கம் உள்ளிட்ட ஏனைய தரப்புகள் மாற்றுவழி பொருளாதார முறைகளை தயாரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சிறுமீனவ சமூகங்களுக்கு மீனவ செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வசதிகளை தயாரித்து வழங்க வேண்டும்.

இடப்பெயர்வு ஒரு பொதுவான வாழ்வாதார மூலோபாயமாகும். மீனவர்களின் எல்லைகளுக்கிடையில் பயணித்து மீன்களை பிடித்தலுக்குள்ள காரணிகளை இனங்கண்டு அவற்றை தீர்ப்பதற்காக அரசுகள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

தொழில் ரீதியான சுகாதார பாதுகாப்பு மற்றும் அநீதியான முறையில் தொழிலில் ஈடுபடும் பின்னணி காரணிகள் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அரசுகள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பலவந்தமான முறையில் ஊழிய சுரண்டல் தொடர்பான பிரச்சினை மற்றும் கடன்சுமைகளை தீர்ப்பதற்காக அரசுகள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மீனவ பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவும், அவர்களின் நல்வாழ்கைக்காகவும், கல்வியின் முக்கியத்துவத்தை கண்டறிந்து பாடசாலை செல்வதற்கும் மற்றும் கல்வி வசதிகளை வழங்க அரசுகள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

கடலில் மற்றும் உள்ளக நீரத்தேக்கங்களின் பாதுகாப்பு தொடர்பாக உள்ள சிக்கலான நிலைமை மற்றும் அவை முழுமையடையாமைக்கு தாக்கத்தை செலுத்தியுள்ள பலவகையான காரணிகளை அனைத்து தரப்பினர்கள் மூலமும் கண்டறியப்பட வேண்டும். மீனவர்களின் தொழில், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் சாதாரண மீனவ முகாமைத்துவ செயற்பாட்டிற்கு உள்ளடக்கப்பட வேண்டும்.

ஆயுத மோதல் சூழ்நிலைமைகளின் பொழுது சிறுமீனவ கைத்தொழிலின் ஈடுபட்ட அனைத்து தரப்பினரினதும் மனித உரிமைகள் மற்றும் கௌரவத்தை பாதுகாக்க வேண்டும்.

## 4. பெறுமானச் சங்கிலிகள் மற்றும் அறுவடைக்கு பின்னரான செயற்பாடுகள் மற்றும் சந்தை.

அனைத்து தரப்பினர்களின் மூலம் சிறுமீனவ அறுவடைக்கு பின்னரான உற்பத்தியின் உபதுறையின் பணியை கண்டறிந்து அறுவடைக்கு பின்னரான உற்பத்தி உபதுறையின் பொழுது, பெண்கள் முக்கிய பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இக் காரணிகள் தொடர்பாக அனைவராலும் கண்டறியப்பட வேண்டும்.

அறுவடைக்கு பின்னரான உற்பத்தியின் பொழுது ஆளுமைதிறன் முன்னேற்றம், ஒருங்கிணைப்பு கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் பொருத்தமான கீழ்க்கட்டுமான வசதிகளுக்கான முதலீடுகளுககாக அரசுகளால் வசதிகளை வழங்க வேண்டும்.

மரபு ரீதியான முறையில் மீனவர்கள் மற்றும் மீனவ தொழிற்சங்கங்களை கண்டறிய வேண்டும்.

மீன் வளங்களுக்காக பொறுத்தமான முறையில் பெறுமானங்களை ஒன்று சேர்க்க வேண்டும்.

அத்துடன் அறுவடைக்கு பின்னரான உற்பத்திகளுக்கு ஏற்படும் பாதிப்புக்களை தடுப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

சிறுமீனவ தயாரிப்புகளுக்காக பிரதேச, தேசிய, சர்வதேச ரீதியாக சமனான மற்றும் நியாயமான சந்தையை ஊக்குவிப்பதற்கு அரசுகள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

சர்வதேச மீன் வியாபாரத்தை ஊக்குவிப்பத்காக, குறைந்த மீன்வள பாவிப்பால் போசாக்கை பெற்றுக்கொள்ளும் மக்களின் போசாக்கு தேவையையும் மற்றும் ஒட்டுமொத்த போசாக்கு தேவையையும் ஆபத்தான நிலைமைக்கு தள்ளக்கூடாது.

சர்வதேச வியாபாரத்தில் கிடைக்கின்ற இலாபங்கள் நியாயமான முறையில் பகிரப்பட வேண்டும். அத்துடன் சந்தை தேவைகளை பூர்த்தி செய்வதற்காக மீன் வளங்கள் அதிகமாக சூரையாடப்படுவது தடுக்கப்படுவதற்காக உகந்த முகாமைத்துவ விதிகளை தயாரித்து வைக்க வேண்டும்.

சர்வதேச வியாபாரம் தொடர்பான கொள்கைகள் மற்றும் சட்டதிட்டங்களை தயாரிக்கும் பொழுது சூழல், சமூக மற்றும் ஏனையவற்றை மதீப்பீடு செய்வதன் மூலம் சூழலுக்கு, கலாசாரத்திற்கு, உணவு பாதுகாப்புக்கு மற்றும் வாழ்வாதார முறைகளுக்கு நிகழும் பாதகமான பாதிப்புக்களை தடுப்பதற்காக நிகழும் தாக்கமானது சமமான முறையில் குறிப்பிடப்பட வேண்டும்.

அரசுகளின் மூலம் சிறுமீனவ கைத்தொழிலின் பெறுமான சங்கிலியில் உள்ள அனைத்து தரப்பினருக்கும் சந்தை வாய்ப்பு, சந்தை தகவல்களை நடைமுறையில் தெளிவாக பெற்றுக்கொள்வதற்காக தேவையான வசதிகளை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

## 5. ஆண், பெண் சமத்துவம்.

சிறுமீனவ கைத்தொழிலின் அபிவிருத்தி உபாயவழிகளின் மூலம் ஆண், பெண் சமத்துவம் பிரதான அங்கத்திற்குள் உள்ளடக்கப்பட வேண்டும்.

அரசுகள் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்குள் கடைமைபட்டிருக்கும் காரணிகளுடன் இணங்கி மற்றும் பெண்கள் பிரச்சினைகளுக்காக தாம் பங்குதாரராகும் சர்வதேச கருவிகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பெண்களுக்கு எதிராக நிகழும் அநீதிகள் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு விசேட செயற்பாடுகளை தயாரித்துக் கொள்ள வேண்டும். ஆண், பெண் சமத்துவத்துடன் ஒத்துப்போகாத நோக்கங்களை மாற்றியமைத்து, ஆண், பெண் சமத்துவம் தொடர்பாக கொள்கைகள் மற்றும் சட்டங்களை தயாரித்து ஆண், பெண் சமத்துவத்தை அடைய வேண்டும்.

பெண்களின் சமூக தரத்தை உயர்த்துவதற்காக ஆண், பெண் சமத்துவத்தை அடைவதற்கும், கொள்கை மற்றும் செயற்பாடுகள், சட்டத்திலுள்ள அழுத்தங்களை மதிப்பிடுவதற்கும் பொறுத்தமான, செயற்படுத்தக்கூடிய மீளாய்வு செயற்பாட்டை தயாரிக்க வேண்டும்.

பெண்களின் செயற்பாட்டிற்கு பொறுத்தமான மற்றும் மிக முக்கியமான தொழில்நுட்பத்தை தயாரிக்க வேண்டும்.

## 6. அனர்த்த ஆபத்து மற்றும் காலநிலை மாற்றம்

காலநிலை மாற்றங்களை எதிர்த்து போரிடுவதற்கு அவசர மற்றும் மிக ஊக்க செயற்பாடுகள் மிக முக்கியமாகும். சிறிய தீவுகளில் வசிக்கும் சிறு அளவிலான மீன்பிடி சமூகங்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அனைவரும் ஒருங்கிணைந்த செயற்பாட்டுக்குள் மற்றும் அனைத்து துறைகளுக்கிடையில் ஒன்றிணைந்த செயற்பாடு அவசியமாகும்.

அதனை கட்டமைப்பதற்காக பிரச்சினைகளளை கண்டறிதல், குறைத்தல் மற்றும் நன்கொடை வழங்குதல் தொடர்பாக கவனத்தை செலுத்தி அதற்கு தேவையான வசதிகளை வழங்க வேண்டும்.

மனித செயற்பாடுகளின் காரணமாக ஏற்படுகின்ற அனர்த்தங்களின் பொழுது சிறுமீனவனுக்கு பாதிப்பு ஏற்படுமேயானால், குறித்த அதிகாரிகள் பொறுப்புணர்வுடன் செயற்படுவதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

காலநிலை மாற்றங்கள் மற்றும் அனர்த்த தாக்கங்கள் அறுடைக்கு பின்னரான உற்பத்தி மற்றும் சந்தை செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் முறை தொடர்பாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

பேரழிவு விளைவுகளுக்கு மறுமொழி கொடுக்கும் பொழுது, மீண்டும் கட்டியெழுப்புவோம் எனும் எண்ணக்கருவை செயற்படுத்த வேண்டும்.

## 07. கொள்கை இணக்கம், நிறுவன ஒருங்கிணைப்பு , மற்றும் செயற்பாடு.

முழுமையான அபிவிருத்தி சட்டகத்திற்குள் சிறுமீனவ சமூக அபிவிருத்தி செய்வதன் முக்கியத்துவம் அரசுகளால் கண்டறியப்பட வேண்டும். அத்துடன் இதனை அடையும் திசைக்கு பயணிப்பதற்கு கொள்கை இணக்க செயற்பாடானது தேவைப்படுகின்றது.

அரசுகள், சிறிய அளவிலான மீன்வள நலன்களை மற்றும் ஒருங்கிணைந்த கடலோர நிர்வாகத்தின் பங்கு காரணமாக கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அத்துடன் இட ஒதுக்கீட்டு அணுகுமுறைகளை பயன்படுத்த வேண்டும்.

அரசுகள், சமுத்திர மற்றும் உள்ளக நீர்த்தேக்கங்கள் மற்றும் சூழல் தொகுதிகளின் சிறந்த ஆரோக்கியத்தை தக்கவைத்துக்கொள்வதற்காக கொள்கைகளை தயாரித்து கொள்வதுடன், கொள்கைகளுக்கிடையில் சிறந்த தொடர்பை பேணுவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மீனவ கொள்கை மூலம் சிறுமீனவ கைத்தொழிலின் நீடித்துநிலைக்கக்கூடிய தன்மையை அளவிடுவதற்கு நீண்டகால குறிகாட்டியொன்றை வழங்க வேண்டும்.

சிறுமீனவ சமூகங்களுக்கு தெளிவாக விடயங்களை தெளிவுபடுத்தக்கூடிய அரச நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகள் இருக்க வேண்டும்.

சிறிய அளவிலான மீன்வளத்துறை பங்குதாரர்கள் தங்கள் நிறுவனத்தில் ஒத்துழைப்பை ஊக்குவிக்க வேண்டும்..

## 08. தகவல், ஆராய்ச்சி மற்றும் தகவல் தொடர்பு

அரசுகள், சிறுமீனவ கைத்தொழிலின் நீடித்துநிலைக்கக்கூடிய முகாமைத்துவத்திற்கு தேவையான தீர்மானங்களை எடுப்பதற்காக குறித்த தகவல்களை சேகரிப்பதற்கும் அவற்றை வெளிப்படைத்தன்மையுடன் கூடிய செயற்பாட்டை நிறுவுவதற்கும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

செயற்திறன் ரீதியாக முடிவுகளை எடுப்பதற்காக தொடர்பாடல் மற்றும் தகவல்கள் தேவைப்படுகின்றது. தீர்மானங்களை எடுப்பவர்கள் பொறுப்புக்களை எடுப்பதற்கும், வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதற்கும், ஊழல்களை தடுப்பதற்கும் அரசுகள் மிக அதிகமான முயற்ச்சியை எடுக்கவேண்டும்.

சிறுமீனவ சமூகங்கள் அறிவுமிக்க குழுவாகவும், அவ்வாறே அவற்றை வழங்கும் மற்றும் பெற்றுக்கொள்ளும் குழுவாகவும் காணப்படுவர். பொறுப்புடன்கூடிய சிறுமீனவ கைத்தொழிலின் நீடித்துநிலைக்கக்கூடிய தன்மைக்கு அமைவாக தகவல்களை தொகுக்க வேண்டும். சிறுமீனவ சமூகங்களின் அறிவு, கலாசார பாவணை, சிறிய அளவிலான மீன்பிடி சமூகங்களின் நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை கண்டறிந்து அவற்றை ஆவணப்படுத்த வேண்டும்.

அரசுகளின் மூலம் சிறுமீனவ சமூகங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும். விசேடமாக தங்கிவாழும் பொருளாதாரத்தில் மையமாக் கொண்டு வாழும் பூர்விக குடிகளுக்கு மற்றும் பெண்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

நடைமுறையிலுள்ள அரங்கின் மூலம் மற்றும் பொறுத்தமான அரங்கை உறுவாக்குவதின் மூலம் மக்கள் மட்டத்திலிருந்து தேசிய மட்டத்திற்கும், அதைவிட உயர்ந்த மட்டத்திற்கும் தகவல்களை பரிமாற்றம் செய்து கொள்வதை முன்னேற்ற வேண்டும்.

சிறுமீனவ கைத்தொழிலுக்கு அமைவான ஆய்வுகள் மற்றும் தரவுகளை சேகரித்தலை ஊக்குவிப்பதற்கும், அவற்றை வரைவிலக்கணம், பகுப்பாய்வு செய்தல் குறித்த அனைத்து தரப்பினரினதும் பங்குபற்றலுடனும் நிகழ்த்துவதற்கும், அதற்கு தேவையான நிதி வசதிகளை வழங்குவதற்கும் அரசுகள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மீனவ கைத்தொழிலிற்குள் பெண்கள் , ஆண்கள் இருசாராருக்கும் சமத்துவத்துடன் பிரதிபலன்கள் பங்கிடப்படும் முறை உறுதிசெய்யும் வகையிலான செயன்முறைகளை கடைப்பிடிப்பதற்கான பல்வேறு ஆய்வுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசுகள் மூலம் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

## 09. ஆளுமை அபிவிருத்தி

தீர்மானங்களை எடுக்கும் செயற்பாட்டிற்கு பங்கு கொள்வதற்காக சிறுமீனவர்களுக்குள்ள ஆற்றல்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். சந்தை வாய்ப்பு சந்தர்ப்பங்களின் மூலம் பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்காக சிறுமீனவர்களின் ஆளுமைகளை முன்னேற்றுவதற்கு அரசுகள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இவ் ஆளுமை அபிவிருத்தியானது, இணை முகாமைத்துவ செயற்பாட்டிற்காகவும், நிலையான அபிவிருத்திக்கு தேவையான அறிவை வளர்ப்பதற்கும் மற்றும் திறைமைகளை வளர்ப்பதற்காகவும் ஆகும்.

## 10. சிறுமீனவ கைத்தொழிலுக்கான வழிகாட்டலை நடைமுறைப்படுத்துவதற்கான ஒத்துழைப்பு மற்றும் கண்காணிப்பு.

சிறுமீனவ கைத்தொழிலுக்கான வழிகாட்டலை நடைமுறைப்படுத்தலுக்கான அனைத்து தரப்பினரையும் ஊக்கப்படுத்த வேண்டும்.

சிறுமீனவ தன்னார்வ வழிகாட்டலை நடைமுறைப்படுத்துவதற்காக அரசுகளால் எடுக்கப்படும் தன்னார்வ செயற்பாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் மற்றும் அவர்களின் விசேட நிறுவனங்களின் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

அரசு உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஒன்றினைந்து செயற்பட்டு சிறுமீனவ வழிகாட்டல் தொடர்பான தெளிவூட்டலை அதிகரிப்பதற்கு மற்றும் அவற்றை மொழிமாற்றம் செய்து இலகு நடையில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

சிறுமீனவ தன்னார்வ வழிகாட்டலை நடைமுறைப்படுத்தும் பொழுது, அச்செயற்பாட்டை கண்காணிக்கும் செயற்பாடானது மிக முக்கியமான செயற்பாடாக கண்டறியப்பட வேண்டும்.

தன்னார்வ வழிகாட்டலை தயாரிக்கும் பொழுது மற்றும் கண்காணிப்பு செயற்பாடுகள் அகிய இரண்டு செயற்பாடுகளின் பொழுதும், சிறுமீனவ சமூகத்தை பிரதிநிதித்துவபடுமாறு உத்தியோகப்பூர்வமான பிரதிநிதகள் பங்குபற்ற வேண்டும்.